TAMIL NADU LEGISLATURE
25 OCT 1975
MADRAS

தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1975 மார்ச் 27

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Polur-Alangayam road

*464 Q.—THIRU N. K. PALANISAMY.—Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of Government for the formation of a ghat road on Javadhu Hills connecting Polur and Alangayam ; and

(*b*) if so, the estimated cost of the same ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) ஆம்.

(இ) அதன் மதிப்பீட்டுத் தொகை ரூ. 75·00 இலட்சமாகும்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இந்த எஸ்டிமேட் போட்டு அதிக நாள் ஆகிவிட்டது. ஜவ்வாது மலையை டூரிஸ்ட் சென்டராக்கும் முயற்சியில், இதற்குரிய மதிப்பீட்டைத் திருத்தியமைத்து சரியான முறையில் பாதை அமைக்கும் வேலை விரைவில் நடைபெறுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இதற்கு சமீபத்தில்தான் ஒரு எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டது. ஏற்கெனவே மலைப் பாதை (காட் ரோடு) ஒன்று இருக்கிறது. அது வழியாக லாரிகள் வந்து போய்க்கொண்டிருக்கின்றன. இன்னும் சரியான முறையில் பாதை அமைத்து, தார் சாலையாகப் போட்டு, பஸ் போக்குவரத்துக்கு வகை செய்யவேண்டும் என்பது அரசின் திட்டமாகும். அதற்கான திட்டம் தயாரித்து, மத்திய சாலை வளர்ச்சித் திட்டத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறோம். இன்னும் அங்கிருந்து அவர்களுடைய முடிவு வரவில்லை. வந்ததற்குப் பிறகு அதுபற்றி அரசு யோசித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, 75 இலட்ச ரூபாயில் ஒரு திட்டம் தயாரித்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஜவ்வாது மலையை டூரிஸ்ட் சென்டராக்குவதற்கு நம்முடைய அரசு முயற்சி எடுத்துத் திட்டம் மத்திய அரசுக்குப் போயிருக்கிறதென்று சொன்னார்கள். அந்த எஸ்டிமேட்டுக்கு மத்திய அரசின் அப்ரூவலை விரைவில் பெற்று 1976-ஆம் ஆண்டிற்குள்ளாக அந்த வேலையை முடிக்க நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்தெந்த வேலைகளை எடுத்துக்கொள்வது என்று அனுப்பப்பட்ட திட்டங்களில் முதல் எண் கொடுக்கப்பட்டிருப்பது இந்தத் திட்டத்திற்கு ஆகும் பாதை அமைப்பதற்கும், நிச்சயமாக டூரிஸ்ட் சென்டராக்கு வதற்கும் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ஜவ்வாது மலைப் பகுதியில் இருக்கும் மலைவாசி மக்களுக்கு வேறு போக்குவரத்து வசதி இல்லாத தால், இதைக் கட்டாயம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு சிபார்சு செய்திருக்கிறோம்.

வெள்ளித் திருப்பூரில் புதிய அணை

*465 வினா.—திரு. வ. எம். இராஜா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) பவானி வட்டத்தில் உள்ள வெள்ளித்திருப்பூர் கிராமத்தில் அணைகட்டும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 15·36 லட்சம். பயன்பெறும் நிலப்பரப்பு 332 ஏக்கர்கள். எதிர்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற் பத்தி 263 டன்கள் ஆகும்.

திரு. ஈ. எம். நடராசன் : தலைவர் அவர்களே, இந்த அணைக்கட்டுத் திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட நெடுங்காலமாகக் கேட்டு வருகிறார்கள். ஆகவே, இதை விரை விலே நிறைவேற்றி முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஏற் கெனவே இருந்துவந்த உத்தரவுப்படி இது சிக்கனமற்ற ஒரு திட்டமாகும். நிதி நிலை அறிக்கையில் முதலமைச்சரவர்கள் தெரிவித்ததற்கேற்ப பின் தங்கிய பகுதி என்று எடுத்துக்கொண்டால் இது சேருமா என்று பார்த்து, அரசின் நிதி நிலை அனுமதிக்குமானால் இதைப்பற்றி ஆராய்ந்து அரசு முடிவு எடுக்கும்.